பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 07 2025 **SUNDAY** 12 40 **PM** ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மாநிலங்களவை உறுப்பினர்களாக நான்கு பேரை நியமித்து, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

   ***புதிதாக நியமிக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பெண் வீராங்கனைகளின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. தமிழகத்தின் திருவள்ளூர் அருகே சரக்கு ரயில் தடம் புரண்டு ஏற்பட்ட தீ விபத்து காரமணாக சென்னை – அரக்கோணம் வழித்தடத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

4. இலங்கை அனுராதபுரத்தில் இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட வீடுகள் இன்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

5. தேசிய சப் ஜூனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா அணிகள் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

<<<<<<<>>>>>>>

மாநிலங்களவை உறுப்பினர்களாக நான்கு பேரை நியமித்து, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, பிரபல வழக்கறிஞர் திரு. **Ujjwal Deorao Nikam,** சமூக சேவகர் திரு. **C. Sadanandan Master,** வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளர் திரு. **Harsh Vardhan Shringla**, வரலாற்று ஆய்வாளர் டாக்டர் மீனாட்சி ஜெயின் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மும்பை தீவிரவாத தாக்குதல் வழக்கில் அரசு வழக்கறிஞராக பணியாற்றிய திரு. **Ujjwal Nikam** சட்டத்துறைக்கும், அரசியல் சாசனத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த வழக்கறிஞரான அவர் சாமானிய மக்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவதை உறுதி செய்யவும், அரசியல் சாசன நற்பண்புகளை வலுப்படுத்தவும் அயராது பணியாற்றி வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, கேரளாவைச் சேர்ந்த கல்வியாளரானதிரு. **C. Sadanandan Master** ஆசியராகவும், சமூக சேவகராகவும் ஆற்றிவரும் பங்களிப்புகளை அவர் பாராட்டியுள்ளார்.

வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளரான திரு. **Harsh Vardhan Shringla** சிறந்த ராஜதந்திரி என்பதோடு, ஜி.20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்த காலத்தில் சிறப்பாக பணியாற்றியவர் என்றும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

வரலாற்று ஆய்வாளரான டாக்டர் மீனாட்சி ஜெயின், கல்வி, இலக்கியம், அரசியல் அறிவியல் உள்ளிட்ட துறைகளில் தலைசிறந்து விளங்குபவர் என்றும் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

**<<<<<<<>>>>>>>**

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில், பெண் வீராங்கனைகள் மற்றும் பெண் விமானிகளின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பெண் வீராங்கனைகளின் பங்களிப்புடன், பாகிஸ்தானில் உள்ள 9 தீவிரவாத முகாம்களை இந்தியா வெற்றிகரமாக அழித்ததாக கூறினார்.

கார்கில் போர் முடிவடைந்து, 26 ஆண்டுகள் நிறைவடைவதை சுட்டிக்காட்டிய திரு. ராஜ்நாத் சிங், கேப்டன் மனோஜ் பாண்டே உட்பட இந்த போரில், தாய்நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களை நினைவுகூர்வதாகவும் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>>**

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சிங்கப்பூரில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணனை சந்தித்து பேசியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கிழக்கு நாடுகளுக்கான இந்தியாவின் கொள்கையில் சிங்கப்பூர் முக்கிய இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் **Temasek Holdings** நிறுவனத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்கவுள்ள திரு. **Teo Chee Hean-**ஐயும் திரு. ஜெய்சங்கர் சந்தித்து, இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

சிங்கப்பூர் பயணத்தை தொடர்ந்து சீனாவின் **Tianjin** செல்லும் திரு. ஜெய்சங்கர், அங்கு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதுடன், பல்வேறு நாடுகளின் அமைச்சர்களையும் சந்தித்து பேசவுள்ளார்.

**<<<<<<<>>>>>>>**

இந்தியாவைச் சேர்ந்த கேப்டன் சுபான்ஷு சுக்லா உட்பட சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள நான்கு வீரர்களும் நாளை பூமிக்கு திரும்பும் பயணத்தை தொடங்கவுள்ளனர்.

இதுதொடர்பாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த குழுவினரின் பயணம் நாளை மாலை நான்கரை மணிக்கு தொடங்கவுள்ளதாகவும், இவர்கள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பூமிக்கு திரும்புவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கென்னடி விண்வெளி தளத்திலிருந்து கடந்த மாதம் 25ஆம் தேதி டிராகன் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்ற இவர்கள், அங்கு தங்கி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

**<<<<<<<>>>>>>>**

சென்னையிலிருந்து ஜோலார்பேட்டை நோக்கி பெட்ரோலியப் பொருட்களுடன் சென்ற சரக்கு ரயில் திருவள்ளூர் அருகே தடம்புரண்டதால் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, சென்னை – அரக்கோணம் வழித்தடத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

சரக்கு ரயிலின் நான்கு பெட்டிகளில் இருந்த பெட்ரோலியப் பொருட்கள் தீப்பற்றியதால், அப்பகுதி முழுவதும் புகைமண்டலமாக காணப்பட்டது.

இதையடுத்து, சம்பவம் நடந்த இடத்திலிருந்து 2 கிலோ மீட்டர் சுற்றளவில் வசிக்கும் பொதுமக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டதாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 58 செகண்ட்ஸ்)

இந்த விபத்து காரணமாக, சென்னையிலிருந்து, கோவை, பெங்களூரு, திருப்பதி செல்லும் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

மங்களூரு, மேட்டுப்பாளையம், கோவை, திருவனந்தபுரம் உள்ளிட்ட இடங்களிலிருந்து சென்னை நோக்கி வந்த எட்டு ரயில்கள், அரக்கோணம், திருவாலங்காடு, கடம்பத்தூர், காட்பாடி, குடியாத்தம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டுள்ளன.

சென்னை எழும்பூர் - மும்பை, காச்குடா — செங்கல்பட்டு, திருவனந்தபுரம் - ஷாலிமர், தானாபூர் - பெங்களூரு உள்ளிட்ட எட்டு ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பிவிடப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

ரயில்வே ஊழியர்களுடன், அரக்கோணத்திலிருந்து சென்ற தேசிய பேரிடர் மீட்புப் படையினரும், மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டுள்ள ரயில்களில் உள்ள பயணிகள், உரிய இடங்களுக்குச் செல்ல ஏதுவாக சிறப்பு பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

இலங்கை அனுராதபுரம் அருகேயுள்ள **Elapathgama** பகுதியில் இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட 90 வீடுகள் இன்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கைப் பிரதமர், டாக்டர். ஹரிணி அமரசூர்யா, இலங்கைக்கான இந்திய தூதர் திரு. சந்தோஷ் ஷா ஆகியோர் இந்த வீடுகளை ஒப்படைத்தனர்.

450 மில்லியன் இலங்கை ரூபாய் மதிப்பில் இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>>

பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியின் போது, வெளிநாட்டவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று மேற்கொண்ட ஆய்வின் போது, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் மியான்மர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

இவர்கள், குடும்ப அட்டை, ஆதார் உள்ளிட்ட ஆவணங்களை பெற்றிருப்பதாகவும் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறியுள்ளன.

**<<<<<<<>>>>>>>**

தேசிய சப் ஜூனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்திற்கு ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா அணிகள் முன்னேறியுள்ளன.

ஜார்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதியில் ஒடிசா 1-0 என்ற கோல்கணக்கில், ஹரியானாவை வென்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஜார்க்கண்ட் 1-0 என்ற கோல்கணக்கில் மிஸோரம் அணியை வென்றது.

**<<<<<<<>>>>>>>**

ஆசிய ஓப்பன் ஜூடோ போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

சீன தைபேயில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆடவர் 73 கிலோ எடைப்பிரிவில் **Arun Kumar** தங்கப்பதக்கத்தையும், மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் **Yamini Maurya** வெள்ளிப்பதக்கத்தையும், 52 கிலோ எடைப்பிரிவில் **Mehak Singh** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**<<<<<<<>>>>>>>**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் போலந்தின் **Iga Swiatek** பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் **Amanda Anisimova-**வை இவர் 6-0, 6-0 என்ற செட்கணக்கில் வென்று, தனது முதலாவது விம்பிள்டன் பட்டத்தை வென்றார்.

**<<<<<<<END>>>>>>>**